# NEWSLETTER

**October 2024**

VIVEKANANDA COMMUNITY FOUNDATION




## Contact Us !

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569


## சிறுவர் தினம் 2024







விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினால் பொறுப்பெடுக்கப்பட்ட 5 பாலர் பாடசாலைகளிலும் கல்வி பயிலும் **125 சிறுவர்களுக்கான** சிறுவர் தின கொண்டாட்டமானது 01.10.2024 அன்று புதுக்குடியிருப்பு விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றதோடு சிறுவர்கள் அதில் கலந்து கொண்டு பாடசாலை வாரியாகக் குழுவாகவும் தனியாகவும் தத்துமது திறமைகளை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் விவேகானந்தப் பூங்காவையும் பார்வையிட்டதோடு கோட்டைப் பூங்காவிற்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். இதன் போது அவர்களுக்கான பரிசுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டு மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். இச்செயற்பாட்டிற்காக எமது அறக்கட்டளையினூடாக **மனித நேய நம்பிக்கை நிதியத்தினர்** தமது நிதி அனுசரணையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்தங்கிய கிராமப் பிரதேசங்களிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு வாழ்க்கைத்திறன் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் அவர்களுக்கான வாழ்வியல் திறன்களையும் வழங்கும் வகையிலான செயலமர்வுகளை நாம் நடாத்தி வருகின்றோம். அந்தவகையில் எமது மாதிரி கிராமமாக தெரிவுசெய்யப்பட்ட ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மாவிலங்கன்துறை கிராமத்தில் 02.10.2024 அன்று குழு மேம்பாடு எனும் தொனிப்பொருளில் இளைஞர் யுவதிகளுக்கான வாழ்க்கைத்திறன் பயிற்சி நடாத்தப்பட்டது. இச்செயற்பாட்டிற்காக எமது அறக்கட்டளையினூடாக **கனடாவில் வசிக்கும் திரு.கோபால் பகீரதன் அவர்கள்** தமது நிதி அனுசரணையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**மாதம் ஒரு களம்**





### விவேகானந்த கலாச்சார நிலையத்தின் பணிப்பாளரின் வருகை

இந்திய உயர்ஸ்தானிகத்தின் ஒரு பகுதியான விவேகானந்த கலாச்சார நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் கலாநிதி அங்குறன் டாட்டா அவர்கள் 11.10.2024 அன்று எமது கல்லூரிக்கு வருகை தந்தார். எமது கல்லூரியின் பயிற்சிநெறிகள் மற்றும் எமது செயற்பாடுகளையும் பார்வையிட்டமை சிறப்பானதாகும்

# Top news

## சமுதாயக் கல்லூரிகளின் ஆரம்பம்




பின்தங்கிய பிரதேசங்கள் மற்றும் வறுமை கோட்டிற்கு கீழ் காணப்படும் இளைஞர் யுவதிகளை முன்னேற்றும் ஒரு செயற்பாடாக இளைஞர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல் எனும் தொனிப்பொருளில் பாடசாலைக் கல்வியினை பூர்த்தி செய்ய முடியாத, பல்கலைக்கழக வாய்ப்பினை தவறவிட்டு தமது எதிர்கால வாழ்வினை கேள்விக்குறியாக்கிய இளைஞர், யுவதிகளை அடிப்படையாக கொண்டு மாற்றுக்கல்வி முறையில் வாழ்வியலும் வழிகாட்டலும் என்ற விதத்தில் தொழில்பயிற்சிகளை வழங்கும் சமுதாயக் கல்லூரிகளை ஆரம்பிக்கும் செயற்பாட்டின் ஒரு அங்கமாக இந்த மனிதநேய சமுதாய கல்லூரி திறந்து வைக்கப்பட்டுள்ளது.










பின்தங்கிய பல கிராமங்களை உள்ளடக்கிய கரடியனாறு பிரதேசத்தில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட மட்/மமே/கரடியனாறு மகாவித்தியாலயத்தின் தனியான கட்டட தொகுதியில் **வலயக்கல்வி அலுவலகத்துடன்** மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் **மனித நேய நிதியத்தின்** அமெரிக்க நாட்டின் பொறுப்பாளர் திரு.கை.அரவிந்தன் மற்றும் அவரது துணைவியார் அவர்களாலும், வலயக்கல்வி அலுவலக திட்டமிடலுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.யோ.சஞ்சீவன் மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்று பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் ஆகியோரினால் **மனிதநேய சமுதாய கல்லூரி** திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஆயித்தியமலை அருட்தந்தை மற்றும் அருட் சகோதரி, அப்பிரதேச பாடசாலை அதிபர்கள், தொண்டு நிறுவன பொறுப்பதிகாரிகள், சமூக நலன்விரும்பிகள், எமது பணியாளர் குழாம், பயிற்சி பெறவிருக்கும் பயிலுனர்கள் என பலரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்ததோடு விவேகானந்த குடும்பத்தினரால் மனித நேய நிதியத்தின் பொறுப்பாளர் திரு.கை.அரவிந்தன் மற்றும் அவரது துணைவியாருக்கும் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது..












சமவாய்ப்புடன் அனைவருக்கும் கல்வி மறுக்கப்படாமல் கொடுக்கப்பட வேண்டும் அத்துடன் அவர்களின் விசேட திறமைகள் வளர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கில் எமது அறக்கட்டளை உறவுகளின் அனுசரணையில் ஆரம்பிக்கப்பட்ட **புகலிடம் சமுதாயக் கல்லூரியை** மனிதநேய நம்பிக்கை நிதியத்தினரும் பார்வையிட்டதுடன் மாணவர்களுக்கான வகுப்பறைகள் ஆரையம்பதி மண்முனைப்பற்று **பிரதேச செயலாளர் திருமதி. தட்சணகௌரி தினேஸ்** அம்மணி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

## ஆனைப்பந்தி பாடசாலையினருக்கான Printer



ஆனைப்பந்தி பாடசாலையினரின் வேண்டுகோளுக்கமைவாக அவர்களுக்கான அச்சுப்பொறி 20.10.2024 அன்று வழங்கிவைக்கப்பட்டது. எமது அறக்கட்டளையின் திட்டமுகாமையாளர் உள்ளிட்ட களசேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இச்செயற்பாட்டிற்காக எமது அறக்கட்டளையினூடாக **கனடாவில் வசிக்கும் திரு.கோபால் பகீரதன் அவர்கள்** தமது நிதி அனுசரணையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## முதியவர்களுக்கான ஆடைகள்

எமது உறவுகளின் வேண்டுகோளையிட்டு மகாளய தினத்தினை முன்னிட்டு 02.10.2024 அன்று புதுக்குடியிருப்பு ஜீவானந்தா இல்லம் மற்றும் களுவாஞ்சிக்குடி நந்தவனம் இல்லத்தில் வசிக்கும் முதியவர்களுக்கான ஆடைகள் வழங்கிவைக்கப்பட்டது. **கனகசெல்லா அறக்கட்டளையினூடாக யேர்மன் ஸ்புறோக்கோவில் நகரில் வசிக்கும் ஸ்ரீஸ்கந்தராஜா மிதிலா குடும்பத்தினரும் குபேந்திரன் மாலினி குடும்பத்தினரும்** இணைந்து இதற்கான ஆடைகளை வழங்கியிருத்தமை குறிப்பிடத்தக்கது.

## மாணவிகளுக்கான வாழ்வியல் பயிற்சி

கொக்கட்டிச்சோலை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான வாழ்க்கைதிறன் செயலமர்வு 03.10.2024 அன்று விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் வாழ்க்கைத்திறன் பயிற்சி பெற்ற சேவையாளர்களால் நடாத்தப்பட்டது. நேர்மறை எண்ணங்கள் நமது வாழ்வில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது, கற்றல் செயற்பாடுகளிற்கு நேர்மறை எண்ணங்கள் எவ்வாறு ஊக்கமளிக்கின்றது, ஒரு மனிதனின் குணத்தையும் எதிர்கால வாழ்க்கையையும் பிரதிபலிக்கின்றது என்பது பற்றிய தெளிவூட்டல் சிறு செயற்பாடுகளூடாக சிறப்பாக வழங்கப்பட்டது. தரம் 9 ஐ சேர்ந்த 45 மாணவர்கள் இச்செயலமர்வில் கலந்துகொண்டனர்.













**மாணவர்களைப் பொறுப்பெடுத்தலுக்கான கள ஆய்வு**

எமது **'மாணவர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல்'** எனும் திட்டத்தினுள் புதிதாக பல்கலைக்கழக மாணவர்களைப் பொறுப்பெடுக்கும் செயற்பாட்டிற்காகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களைப் பார்வையிடும் வண்ணம் எமது திட்டமுகாமையாளர் உள்ளிட்ட சேவையாளர்களால் மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று களவிஜயம் 24.10.2024 அன்று மேற்கொள்ளப்பட்டது. இச்செயற்பாட்டிற்காக எமது அறக்கட்டளையினூடாக **மனித நேய நம்பிக்கை நிதியம்** மாதாந்தம் ரூ.7000 வழங்க முன்வநதுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அவ்வாறே, பாடசாலை மாணவர்களைப் புதிதாகத் தெரிவுசெய்யும் வண்ணம் மாணவர்களைப் பார்வையிடும் வண்ணம் கள சேவையாளர்களால் 29.10.2024 அன்று களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது. மாணவர்களின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கைகள் சமர்ப்பித்தல் தொடர்பாக பாடசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடப்பட்டதோடு திட்டம் பற்றிய தெளிவூட்டலும் வழங்கப்பட்டது.

**மாவிலங்கத்துறை கிராமத்தின் தொண்டர் பணி**

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் கிராமங்களுக்கான வலுவூட்டல் செயற்பாட்டின் ஒரு பகுதியாக மாவிலங்கன்துறையில் கிராம அபிவிருத்திப் படையணியை உருவாக்குவதற்கான இரண்டாவது பயிற்சிப் பட்டறை மாவிலங்கத்துறை கிராம சேவகர் தலைமையில் எமது நிறைவேற்றுப் பணிப்பாளர் க.பிரதீஸ்வரன் அவர்களால் நடாத்தப்பட்டது.

இப் பயிற்சிப்பட்டறையில் பற்றிமாபுரம், மண்முனை மற்றும் மாவிலங்கத்துறையென மூன்று கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்திய இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டதோடு தங்கள் கிராமங்களில் உள்ள பின்னடைவுகள் மற்றும் நடைமுறை பிரச்சினைகள் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. தனிமனித இலக்கு மற்றும் கிராமத்தின் இலக்கு பற்றியும் ஆராயப்பட்டதோடு சிறு செயற்பாடுகள் மூலமும் தெளிவூட்டப்பட்டது.

இச்செயற்பாட்டிற்காக எமது அறக்கட்டளையினூடாக **கனடாவில் வசிக்கும் திரு.கோபால் பகீரதன் அவர்கள்** தமது நிதி அனுசரணையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.







**பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்**

எமது 'சிறுவர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல்' எனும் திட்டத்தினுள் அடங்கும் 5 பாலர் பாடசாலைகளின் 9 ஆசிரியர்களுக்கான இந்த ஆண்டிற்குரிய கலந்துரையாடல் எமது அறக்கட்டளையின் திட்டமுகாமையாளர் தலைமையில் 28.10.2024 அன்று நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடல் கொம்மாதுறை விவேகானந்தா கல்லூரியில் இடம்பெற்றதோடு பாலர் பாடசாலைகளுடனான எமது அறக்கட்டளையின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் ஆலோசிக்கப்பட்டதோடு இவ்வாண்டிற்கான அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டது.






**தீபாவளி தினத்தினை முன்னிட்டு மாணவிகளுக்கான ஆடைகள்**

தீபத்திருநாளை முன்னிட்டு வருடாந்தம் எம்முடன் இணைந்து பயணிக்கும் இல்லங்களில் வாழும் சிறுவர்களுக்கான ஆடைகளை எமது புலம்பெயர்ந்த உறவுகளின் அனுசரணையுடன் நாம் வழங்கி வருகின்றோம். அந்த வகையில் மயிலம்பாவளி வாழும் கலை ஆசிரமத்தில் வசிக்கும் சிறுமிகளுக்கான ஆடைகள் வழங்கும் நிகழ்வு 26.10.2024 அன்று இடம்பெற்றதோடு எமது அறக்கட்டளையின் திட்டமுகாமையாளருட்பட சேவையாளர்களும் கலந்துகொண்டனர்.

புதுக்குடியிருப்பு ஜீவானந்தா ஆசிரமத்தில் வசிக்கும் சிறுமிகளுக்கான ஆடைகள் 28.10.2024 அன்று எமது அறக்கட்டளையின் சேவையாளர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

அவ்வாறே அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் மாணவிகளுக்கான ஆடைகள் 30.10.2024 அன்று வழங்கிவைக்கப்பட்டது. சாரதா நிலையத்திற்காக நன்கொடை வழங்கிய எமது அறக்கட்டளை உறவுகளின் விபரம் வருமாறு

- திரு.வாமதேவன் அமர்நீதி, அமெரிக்கா
- அன்றன் ரோமன் எட்மன் ரூபினா, இத்தாலி
- திரு.திருமதி.இராசசிங்கம் கனகாம்பிகை, இலண்டன்
- திரு.ராமச்சந்திரன் மதிவண்ணன், அவுஸ்திரேலியா
- திரு.சிவாகரன் பவாநந், அவுஸ்திரேலியா
- திரு.மங்கலரூபன் ஆறுமுகம், கனடா
- திரு.திருமதி.நடராஜ் லண்டன்
- திருமதி.விஜயஸ்ரீ விஜயகுமார், லண்டன்

**உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்குகள்**

எமது அறக்கட்டளையானது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் நடைமுறைப்படுத்தலூடாகப் பாடசாலைகளில் உயர்தரம் பயிலும் மாணவர்களுக்கான கருத்தரங்குகளை வருடாந்தம் நடாத்தி வருகின்றது. அந்த வகையில் பின்தங்கிய பிரதேசங்களை உள்ளடக்கிய பட்டிருப்பு, மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களை மையப்படுத்தியதாக களுதாவளை, பட்டிருப்பு, பழுகாமம், மண்டூர், முனைக்காடு, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு, அம்பிளாந்துறை, அரசடித்தீவு, வந்தாறுமூலை, முறக்கொட்டாஞ்சேனை, செங்கலடி ஆகிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 13 பாடசாலைகளில் கல்வி பயிலும் 1060 மாணவர்களுக்கான ஆங்கிலம், பொது அறிவு, மற்றும் தொழிநுட்பவியல் பாடங்களுக்கான கருத்தரங்குகள் செவ்வனே நடைபெற்றது.




| No | Name of the School | Subject | No of Students |
|---|---|---|---|
| 1 | Bt/Pd/Kaluthavalai Maha Vithyalayam | Technology | 100 |
| 2 | Bt/Pd/Paddiruppu Maha Vithyalayam | GIT | 400 |
| 3 | Bt/Pd/Kandumani Maha Vithyalayam | General English | 30 |
| 4 | Bt/Pd/Mandoor Shakthi Maha Vithyalayam | GIT | 30 |
| 5 | Bt/Mw/Munaikaadu Vivekananda Maha Vithyalayam | GIT | 28 |
| 6 | Bt/Mw/Muthalaikuda Maha Vithyalayam | GIT | 84 |
| 7 | Bt/Mw/Kokkadicholai Ramakrishna Maha Vithyalayam | GIT | 17 |
| 8 | Bt/Mw/Mahiladitheevu Kannagi Vithyalayam | GIT | 28 |
| 9 | Bt/Mw/Ambilanthurai Kalaimagal Maha Vithyalayam | GIT | 77 |
| 10 | Bt/Mw/Arasaditheevu Maha Vithyalayam | General English | 100 |
| 11 | Bt/KK/Vantharumoolai Central College | GIT | 96 |
| 12 | Bt/KK/Murakottanchenai Ramakrishna Maha Vithyalayam | General English | 25 |
| 13 | Bt/KK/Vishnu Maha Vithyalayam | General English | 45 |
| Total | | | 1060 |

**சுற்றாடல் கழக மாணவர்களுக்கான பங்களிப்பு**

எமது அறக்கட்டளையின் பசுமைப்புரட்சித் திட்டத்தினூடாக சுற்றாடல் முன்னோடிப் படையணியின் மூன்றாவது நிர்வாகக்கூட்டம் 25.10.2024 அன்று எமது கல்லூரியில் இடம்பெற்றது. காத்தான்குடி/மீராபாலிகா வித்தியாலய மாணவர்களின் தனிப்பட்ட திட்டச்செயற்பாட்டின் ஆவணப்படுத்தல் நிகழ்வும் நடைபெற்றதோடு சூழலுக்கான எமது பங்களிப்பின் அவசியம் மற்றும் பொலித்தீன் பாவனை பற்றியும் கலந்துரையாடப்பட்டது.



விவேகானந்த குடும்பத்தினரின் 2024 ஆம் ஆண்டிற்கான வாணிவிழா 12.10.2024 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சமூக நலன்புரி அமைப்பு, விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரி, விவேகானந்த சமுதாய அறக்கட்டளை, அமிர்தா என அனைத்து அமைப்புக்களின் சேவையாளர்களும் கலந்துகொண்டதோடு எமது கல்லூரியின் பயிலுனர்களும் கலந்து சிறப்பித்தனர்.



## Donation – Request details

**Annai Sri Sarada Center**
Special Meal per Day
- LKR 40,000

**Sponsor a Pre-School**
per Month
- LKR 65,000

Nutritious Food per Child
- LKR 3,000

**Jeevananda Girls Home**
Special Meal per Day
- LKR 20,000

**Nandavanam Elders Home**
Special Meal per Day
- LKR 15,000

**Sponsor a Youth**
per Technician
- LKR 10,000

**Sponsor a Student**
per Month
- LKR 3,500

**Nutrion Pack for Pugalidam Disables Center**
per Pack
- LKR 3,500

**Education Materials For School students**
per Pack
- LKR 5,000

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் ஒக்டோபர் மாதத்திற்கான விசேட உணவு வழங்கப்பட்டது.





உங்கள் விசேட தினங்களின் ஞாபகார்த்தமாக இவ்வாறு எமது சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நீங்களும் உங்களால் முடிந்த உதவியை வழங்குவதன் மூலம் எமது சமூக வலுவூட்டலில் பங்களிப்பை மேற்கொள்ளலாம்.

தானங்களில் சிறந்த தானம்
அன்னதானம்

மேலதிக தகவல்களுக்கு
http://wa.me/+94776770780
http://wa.me/+94777105569

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்



